பாரதியார் கவிதையில் பெண்ணியச் சிந்தனைகள்

பா. ஜெரின் ஸாரன்ஸ்
பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
ஸ்ரீ. பராசக்தி பெண்கள் கல்லூரி, குற்றாலம்

முன்னுரை

மகாகவி சுப்பிரமணிய பாரதியார் இந்தியாவின் விடிவெள்ளியாகத் தோன்றியவர் விடுதலை உணர்வையும், விழிப்புணர்வையும் மக்களிடையே பரவச் செய்த மகான். இவர் புதுமைப்பெண், பெண்மை, விடுதலைக்கும்மி போன்ற பல்வேறு தலைப்புகளில் பெண்மையைப் போற்றியுள்ளார். அவரின் சிந்தனை பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

பெண்

"பெண் என்பவள் பேசும் தெய்வம்"

என்பதை வலியுறுத்தும் முகமாக அன்னை "காளியை" ஆயிரம் இடங்களில் சுட்டுகிறார். சமுதாயத்தில் பெண் என்பவள் ஒரு அங்கமாகக் கருதப்படுகிறாள். பெண் என்பவள் பிறந்தது முதல் யாரையேனும் சார்ந்து வாழ வேண்டி உள்ளது. இளமைப் பருவத்தில் பெற்றோரையும், திருமணம் முடிந்த பின் கணவனையும், அதற்குப் பின் தன்னுடைய மகனையும் சார்ந்து வாழ வேண்டி உள்ளது.

பெண்களின் சிக்கல்கள்

ஆண் ஆதிக்கச் சமூகம் பெண்ணுக்கும் பல அடிமை விலங்குகளை புட்டி அவர்களை அடக்கி வைத்திருக்கிறது. பாரதியாரின் பெண்விடுதலை பற்றி கூறும் கருத்துக்கள் ஆண் ஆதிக்கச் சமூகத்திற்கு பாடமாக அமைந்துள்ளது எனில் மிகையாகாது.

பெண்ணின் எதிர்பார்ப்பு

பெண் என்பவள் அழகானவள் மென்மையானவள், இன்பம் தரக் கூடியவள். பொறுமையினல் புமாதேவி, கேலி செய்யப் பிறந்தவள். ஒரு பெண்னை திருமணம் செய்து கொள்ளும் முன் பலவகையான பலன்களை எதிர்பார்க்கின்றனர். அவள் அழகுடையவளாகவும் அதிகமான சீர்வரிசை கொண்டு வருபவளாகவும் வீட்டிற்கு அடங்கி நடப்பவளாகவும் இருக்க வேண்டும் என்று கருதுகின்றனர். வீட்டை விட்டு வெளியே வந்தால் வீடு திரும்பும் வரை பல்வேறு விதமான இன்னல்களுக்கு ஆளாக வேண்டி உள்ளது. பலபேரின் கேலிச் சொற்களைக் கேட்டு அதை சகித்து கொண்டு வாழ வேண்டி இருக்கிறது.

பெண்ணியம்

பெண்ணியம் என்பது பெண்ணுக்கு என்று எதையும் பிரித்து போதிப்பதன்று. இயற்கையிலேயே அமைந்த உடலும் மனமும் சார்ந்த வேறுபாடுகளை மனதில் கொண்டு காலம், இடம், மொழி, சாதி, சமயம் கடந்து கூறுவதாகும்.

பெண்கள் உணவு சமைத்தல், விருந்தோம்பல், வீட்டு வேலைகள் செய்தல் போன்ற பல்வேறு வேலைகளைச் செய்து வருகின்றனர். சிலர் இன்னும் அடுப்படியிலேயே முடங்கி கிடக்கின்றனர்.

"எங்கெங்கு காணினும் சக்தியடா
என்று சக்தியின் உருவமாகப் பெண்னைப் பார்க்கிறார்"[2]

"தெய்வம் தொழாள் கொழுநன்- தொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை"[3]

திருவள்ளுவர்

அடிமைவாழ்வு

அறிவு நிரம்பப் பெற்றவர்கள் ஆண்களின் அடிமைத்தனத்தினால் தான் பாமரர் முதல் படித்தவர் வரை அடிமை வாழ்வு எய்தும் நிலைக்கு தள்ளப்படுகின்றனர். ஆணாதிக்க

சமூகத்தினால் கத்தி போன்ற கூர்மையான நாக்கினால் காயப்படுத்தப்படுகிறார்கள். உணவில் இருந்து உடுக்கும் உடையில் கூட கட்டுப்பாடுகளைச் சந்திக்க வேண்டிய சூழலில் சிலர் இன்னும் வாழ்வை எதிர் கொள்ள வேண்டிய நிலையில் உள்ளனர்.

"அறிவு கொண்ட மனித உயிர்களை
அடிமையாக்க முயல்பவர்கள் பித்தராம்"[4]

என்று தம் பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

பெண்ணின் துணிவு

பாரதி மனைவியையும் தாயையும் மதிக்க வேண்டும் என்ற கருத்தை

"மண்ணுக்குள் எவ்வுயிரும் தெய்வமென்றால்
மனையாளும் தெய்வமன்றோ மதிகெட்டீரே
தாயைப் போல பிள்ளையென்று
முன்னோர்
வாக்கின் படி பெண்மை அடிமையுற்றால்
மக்களெல்லாம் அடிமையுறல் வியப்பன்றோ"[5]

என்று விளக்குகிறார்.

பெண் எப்படிப்பட்டவளாக இருக்க வேண்டும்

ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால் அறிவிலோங்கி இவ்வையம் தழைத்தோங்கு மாம் சமுதாயத்தில் ஒரு பெண் நல்ல முறையில் வாழ வேண்டுமெனில் எதிர்த்து நிற்கும் துணிவு தன்னம்பிக்கை, முயற்சி, ஊக்கம், வைராக்கியம் போன்ற உயர்ந்த இலட்சியங்களைக் கைக்கொள்பவர்களாக இருக்க வேண்டும்

"நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்"
நிமிர்ந்த ஞானச் செருக்கும்
இருப்பதால்
செம்மை மாதர் திறம்புவதில்லையாம்
அமிழ்ந்து பேரிருள் அறியாமையில்"[6]

என்றார் பாரதி

பெண்மை வெல்க

பெண்மை வாழ்க! என்று அழைத்து பெண்களுக்குப் பெருமை சேர்க்கும் பாரதி,

"பெண்மை வாழ்க வென்று
கூத்திடுவோமடா
பெண்மை வெல்க என்று
கூத்திடுவோமடா"[7]

என்று கூறிவிட்டு ஆண்களுக்கு சாட்டையடி கொடுக்கும் விதமாக,

"பெண்ணறத்தனை ஆண் மக்கள் வீரந்தான்
பேணுமாயின் பிறகொரு தாழ்வில்லை"[8].
"கண்ணைக் காக்கும் இமை
முரண்டின்மை போலவே
"உயிரைக் காக்கும் உயிரினைச் சேர்ந்திடும்
உயிரினுக்குயிராய் இன்பமாகிவிடும் உயிரினும்
இந்த பெண்மை இன்றடா"[9]

என்கிறார் பாரதி.

பெண் விடுதலை

பெண் விடுதலை பற்றிப் பேசும் போது அடிமை வாழ்வு வாழ்ந்த பெண்களின் அவல நிலையை எண்ணி வருந்துகிறார். படிப்பறிவு இல்லாத நிலை திருமண வாழ்வின் அவலநிலை சமுதாய உரிமை ஆகியவற்றிறைப் பற்றியும் கூறுகிறார் கல்வி கற்க முடியாத நிலையையும் விருப்பமில்லா திருமண வாழ்வையும் நினைத்துக் குமுறும் பாரதி.

"ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமை என்று
எண்ணி இருந்தபவர் மாய்ந்து விட்டார் வீட்டுக்குள்ளே
பெண்ணைப் புட்டிவைப்போம் என்ற விந்தை
மனிதர் தலை கவிழ்ந்தார்"[10]

பெண் தன்னை விட படிப்பில் சிறந்தவளாக ஆளுமைமிக்க பெண்ணாக இருப்பதைக் கண்டு குமுறும் ஆண்களுக்காகவே எழுதப்பட்ட வரியாக அமைந்துள்ளது. பெற்றோர்கள் பெண்களுக்கு திருமணம் செய்து வைத்து விட்டால் கடமை முடிந்து விடுகிறது என்று வரன்களை நன்கு விசாரிக்காமல் திருமணம் செய்து வைத்து விட்டு மீளாத்துன்பத்தில் மாட்டிக் கொள்கின்றனர்.

ஆண்டாண்டு காலமாக அடிமைப்பட்டு கிடக்கும் பெண்களுக்கு விடுதலைப் பெற்றுதரப் பாடுபட்டவர் இந்தியாவில் ஏராளம். இல்லாளின் மாண்பைப் போற்றி வள்ளுவர்.

"பெண்ணிற் பொருந்தகயாவுள"[11]

எனக் கேட்பதிலிருந்து பெண்ணின் பெருமையை அறிய முடிகிறது.

"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
புாினின் ˙நடத்தவந்தோம்
ஏட்டுமறிவினில் ஆணுக்கிங்கே பெண்
இளைப்பில்லை கானென்று கும்மியடி"[12]

என்று சம உாிமைச் சிந்தனையைக் கூறுகிறார்.

முடிவுரை

பெண்கள் தகுதியும் திறமையும் கொண்ட தமிழ்நாட்டுப் பெண்கள் வெளியுலகை அறிந்தும் தம் பிள்ளைகளை நற்பண்புள்ளவர்களாக ஆளாக்கி சமுதாயத்தில் நற்பண்புள்ள குடிமகனாக வளர்க்க வேண்டிய பொறுப்பு பெண்களிடம் மிகப்பெரும் பங்கு உள்ளது. அப்பெண்கள் ஞானத்தில் சிறந்தது நாட்டிற்கும் சமுதாயத்திற்கும் நற்பெயர் தரக் கூடியவர்களாக திகழ முடியும் என்பதை இக்கட்டுரையில் பாரதியார் கூறுகிறார்.

பார்வை நூல்கள்

1. பாரதியார் கவிதைகள்
2. திருக்குறள் எளிய உரை